# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 17/2022**

பெயர்: **பச்சியண்ணன்** நாள்: 01.03.2024

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – பச்சியண்ணன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.14</u>

நான் குடியிருக்கும் வீட்டை தவிர விவசாய நிலமும் உள்ளது என்றால், சரியல்ல. கன்னந்தேரி கிராமம் சர்வே எண் 133/5A ல் ஹெக். 0.14.80 மற்றும் சர்வே எண் 133/8 ல் ஹெக்.0.11.0, சர்வே எண் 133/9 ல் ஹெக்.0.03.5, சர்வே எண் 133/14 ல் ஹெக்.0.14.0 பட்டா எண் 706 மற்றும் கன்னந்தேரி கிராம சர்வே எண் 133/3 ல் ஹெக்.0.21.5, சர்வே எண் 133/10 ல் ஹெக்.0.21.5 பட்டா எண் 117 ஆகியவைகளில் நிலங்கள் உள்ளது என்றாலும், மேற்படி சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு குட்டை புறம்போக்கில் உள்ளது என்றால், சரிதான். மாண்புமிகு உயர்நீதி மன்ற உத்தரவின்படி குட்டை புறம்போக்கு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்கு அரசுதான் உரிமையாளர் என்பதால் அரசுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவது நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கை இந்த நீதிமன்றம் விசாரிக்க ஆள்வரை இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.20</u>

ஒப்பம்/பச்சியண்ணன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.